பகவத் கீதை
BHAGAVAD-GITA

April 9, 2015

Selections from Bhagavad-Gita: Translation by Gandhi, Bharati and Kannadasan

தேர்ந்தெடுத்த கீதை - மொழி பெயர்ப்பு
மகாத்மா காந்தி-மகாகவி பாரதி- கவியரசு கண்ணதாசன்

April 9, 2015
ஏப்ரல் 9, 2015

Dear Friends,

Greetings! My mother Shrimathi. N.Gnanambal introduced Mahabharata, Mahatma Gandhi, Mahakavi Bharati and Kannadasan to me when I was in elementary school. As a tribute, I present the translation of Bhagavad-Gita (one verse per chapter) by Gandhi, Bharati and Kannadasan on her first anniversary.

April 9, 2015

அன்புடையீர ,

வணக்கம். எனது தாயார் திருமதி. ஞானாம்பாள் அவர்களின் முதலாண்டு நினைவிற்காக இந்த பகவத் கீதை சுருக்கம் வெளியிடப்படுகிறது. அத்தியாயத்திற்கு ஒரு கீதையை தேர்வு செய்து, அதற்கு மகாத்மா காந்தி, மகாகவி பாரதி மற்றும் கண்ணதாசன் மொழிபெயர்ப்புகளைத் தொகுத்துள்ளேன்.

ஏப்ரல் 9, 2015

பகவத் கீதை மொழியாக்கம்
அத்தியாயத்துக்கு ஒரு கீதம்
மகாத்மா காந்தி -மகாகவி பாரதி - கவியரசு கண்ணதாசன்

R. K. Laxman's Cartoon in R.K.Narayan's Mahabharata

Selections from Bhagavad Gita- Translation by Gandhi, Bharati and Kannadasan

Gita 1.1 Arjuna Visada Yoga

Tell me, O Sanjaya, what my sons and Pandu's assembled, on battle intent, did on the field of Kuru, the field of duty.

"The human body is the battlefield where the eternal duel between right and wrong goes on. The Kauravas represent forces of evil, the Pandavas the forces of Good. Who is there that has not experienced the daily conflict within himself between the forces of Evil and the forces of Good?" (comment by Gandhi)

Gandhi- The Bhagavad Gita According to Gandhi, Mahadev Desai, Wilder Publications, 2011

கீதை 1.1 அர்ஜுன விஷாத யோகம்

சஞ்ஜயா, அற நிலமாகிய குரு நிலத்தில் போர் செய்ய விரும்பித் திரண்ட நம்மவர்களும் பாண்டவரும் என்ன செய்தனர்?

பாரதி- பாரதியார் பகவத் கீதை
பூம்புகார் பிரசுரம், 1977

கீதை 1.1 அர்ஜுன விஷாத யோகம்

சஞ்ஜயா, அறநிலமாகிய குருநிலந் தன்னில் நம்மவர் பாண்டவர் நடத்திய தென்ன? போரின் நிலையைப் புரிந்துரை செய்க!

கண்ணதாசன் அருளிய பகவத் கீதை
கண்ணதாசன் பதிப்பகம் 2010

2.27 Sankhya Yoga

For certain is the death of the born, and certain is the birth of the dead; therefore what is unavoidable thou shouldst not regret.

Gandhi

2.27 சாங்கிய யோகம்

பிறந்தவன் சாவது உறுதியெனில், செத்தவன் பிறப்பது உறுதியெனில், இந்த விலக்கொணாச் செய்திக்கு நீ அழுங்குதல் தகுதியன்று

பாரதி

2.27 சாங்கிய யோகம்

பிறந்தவர் இறப்பாரென்றால், இறந்தவர் பிறப்பாரன்றோ? உன்னால் தவிர்க்க முடியாத இந்த நிகழ்ச்சிக்கு நீ ஏன் கலங்குகிறாய்?

3.7 Karma Yoga

But he, O Arjuna, who keeping all the senses under control of the mind, engages the organs in Karma yoga, without attachment- that man excels.

“Karma yoga is the yoga (means) which will deliver the self from the bondage of the body, and in it there is no room for self-indulgence” (comment by Gandhi)”

3.7 கர்ம யோகம்

அர்ஜுனா, எவன் இந்திரியங்களை மனத்தால் கட்டுப்படுத்திக்கொண்டு, கர்மேந்திரியங்களால் கர்ம யோகம் பண்ணுகிறானோ, அவன் சிறந்தவன்.

3.7 கர்ம யோகம்

அர்ஜுனா! புலன்கள் மனத்தால் இழுக்கப்படாமல், மனத்தால் புலன்களைக் கட்டுப்படுத்தி, எவன் கரும யோகம் என்னும் தொழில் நிலையில் ஈடுபடுகிறானோ, அவன் சிறந்தவன்.

4.10 Gyaanakarma Sanyasa Yoga

Freed from passion, fear and wrath, filled full with Me, relying on Me, and refined by the fiery ordeal of knowledge, many have become one with Me.

4.10 ஞானகர்ம சந்யாச யோகம்

விருப்பத்தையும், அச்சத்தையும், சினத்தையும் துறந்தோராய், என் மயமாய், என்னை அடைக்கலம் புகுந்து ஞானத்தவத்தால் தூய்மைபெற்று என்னியல்பு எய்தினோர் பலர்.

4.10 ஞானகர்ம சந்யாச யோகம்

ஆசையை விட்டு, அச்சத்தை விட்டு, கோபத்தை விட்டு, என் நினைவே ஆகி, என்னையே அடைக்கலம் என்று நம்பி, அறிவாலே தவம் செய்து பரிசுத்தமாகி என்னுடைய இயல்புகளை அடைந்தவர்கள் பலர்.

5.20 Sanyasa Yoga

He whose understanding is secure, who is undeluded, who knows Brahman and who rests in Brahman, will neither be glad to get what is pleasant, nor sad to get what is unpleasant.

5.20 சந்யாச யோகம்

விரும்பிய பொருளைப் பெறும்போது களி கொள்ளான்; பிரியமற்றதைப் பெறும்போது துயர்ப்பட மாட்டான்; பிரம்மஞானி. ஸ்திர புத்தியுடை யோனாய், மயக்கம் நீக்கி, பிரம்மத்தில் நிலைபெறுகிறான்.

5.20 சந்யாச யோகம்

சகல ஞானங்களும் கைவரப் பெற்ற ஒருவன், தனக்குப் பிரியமான ஒன்று கிடைத்துவிட்டால், 'ஓகோ' என்று குதிக்கவும் கூடாது; தான் விரும்பாததை அடைய நேர்ந்தால் அழவும் கூடாது.

6.5 Dhyana Yoga

By one's Self should one raise oneself, and not allow oneself to fall; for Atman (Self) alone the friend of self, and Self alone is self's foe.

Gandhi

6.5 தியான யோகம்

தன்னைத் தான் உயர்த்திக்கொள்க; தன்னைத் தன்னால் இழிவுறுத்த வேண்டா; தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன்.

பாரதி

6.5 தியான யோகம்

முள்ளை முள்ளாலேயும் எடுக்கலாம்; நாம் எடுக்கப் பயன்படுத்துகிற முள்ளே இன்னொரு முள்ளாகவும் ஆகிவிடலாம். அதுபோல், ஆத்மாவே ஆத்மாவுக்கு நண்பன்; ஆத்மாவே ஆத்மாவுக்குப் பகைவன். எச்சரிக்கையாக நடந்து, ஆத்மாவை ஆத்மாவினாலே உயர்த்த வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் அதைக் கீழ் நோக்கிச் செல்லவிடக் கூடாது. (இங்கே ஆத்மா என்பது எதிலும் பற்று வைக்காத உள்ளம்)

7.21 Gyaana ViGyaana Yoga

Whatever form one desires to worship in faith and devotion, in that very form I make that faith of his secure.

Gandhi

7.21 ஞான விஞ்ஞான யோகம்

எந்த எந்த பக்தன், நம்பிக்கையுடன், எந்த எந்த வடிவத்தை அர்ச்சிக்க விரும்புகிறானோ, அவனவனுடைய அசையாத நம்பிக்கைக்குத் தக்க வடிவத்தை நான் மேற்கொள்ளுகிறேன்.

7.21 ஞான விஞ்ஞான யோகம்

சில மக்கள் பலவகையான தேவதைகளை சரணடைகிறார்கள். அந்த தேவதைகளுக்கு சரீரம் மட்டும் தான் வேறு; ஆத்மா நானே; ஒருவன் அந்தச் சரீரத்தை அக்கறையோடு பூஜிக்க விரும்பினால், அந்த அக்கறையைக்கூட நான் ஏற்றுக்கொண்டு உறுதியாக்குகிறேன்

8.6/7 Aksara Brahma Yoga

Or whatever form a man continually contemplates, that same he remembers in the hour of death, and to that very form he goes, O Kaunteya.

Therefore at all times remember Me and fight on; thy mind and reason thus on Me fixed thou shalt surely come to Me.

8.6/7அட்சர பிரம்ம யோகம்

ஒருவன் முடிவில் எவ்வெத் தன்மையை நினைப்பானாய் உடலைத் துறக்கின்றானோ, அவன் எப்போதும் அத்தன்மையிலே கருத்துடையவனாய் அதனையே எய்துவான்.

ஆதலால், எல்லாக் காலங்களிலும் என்னை நினை. போர் செய். என்னிடத்தே மனத்தையும், புத்தியையும் அர்ப்பணம் செய்வதனால் என்னையே பெறுவாய்.

பாரதி

8.6/7அட்சர பிரம்ம யோகம்

குந்தியின் மகனே! மரண காலத்தில் எதை எதை நினைத்துக்கொண்டே ஒருவன் உயிரை விடுகிறானோ, அவன் அதே நிலையை அடைகிறான். காரணம் அதையே நினைத்ததின் பலன் அது.

ஆகவே, ஒவ்வொரு கணையை வீசும்போதும், என்னையே நினைத்துக்கொண்டு போர் நடத்து. உன் மனத்தையும், அறிவையும் என்னிடம் கொடுத்து விட்டுப் போரிடு. நீ என்னையே அடைவாய். சந்தேகமில்லை.

9.26 Raja-Vidya-Raja-Guhya Yoga

Any offering of leaf, flower, fruit or water, made to Me in devotion, by an earnest soul, I lovingly accept.

“That is to say, it is the lord in every being whom we serve with devotion who accepts the service” (comment by Gandhi)

9.26 ராஜ வித்தியா ராஜ ரகசிய யோகம்

இலையேனும், பூவேனும், கனியேனும், நீரேனும்,
அன்புடனே எனக்கு அளிப்பவன் ஆயின்,
முயற்சியுடைய அன்னவன் அன்புடன் அளித்ததை
உண்பேன் யான்.

9.26 ராஜ வித்தியா ராஜ ரகசிய யோகம்

நீ எனக்கு ஒரு இலையைக் கொடு; அல்லது பூவைக் கொடு; இல்லை ஒரு பழத்தைக் கொடு; அதுவும் இல்லை கொஞ்சம் தண்ணீர் கொடு; எதைக் கொடுத்தாலும் பக்தியோடு கொடு; சுத்தமான மனம் உள்ளவன் பக்தியோடு கொடுப்பதை நான் சாப்பிடுகிறேன்.

10.20 Vibuti Yoga

I am the Atman, O Gudakesha, seated in the heart of every being; I am the beginning, the middle and the end of all beings.

10.20 விபூதி யோகம்

அர்ஜுனா, உயிர்களனைத்தின் உள்ளே நிற்கும் ஆத்மா நான். அவ்வுயிர்களின் ஆதி நான். இடையும் அவற்றின் இறுதியும் யானே.

10.20 விபூதி யோகம்

அர்ஜுனா! அத்தனை மனத்திலும் தத்துவமாய் நிற்கும் ஆன்மா நான்; உயிர்களின் தொடக்கம் நான்; வளர்ச்சி நான்; முடிவும் நானே!

11.5 Visvarupa Darsana Yoga

Behold, O Partha, my forms divine in their hundreds and thousands, infinitely diverse, infinitely various in color and shape.

11.5 விசுவ ரூப தரிசன யோகம்

பல நூறாகவும், பல்லாயிரமாகவும்,
வகை பல, நிறம் பல, அளவு பலவாகும்
என் திவ்ய ரூபங்களைப் பார்! பார்த்தா.

11.5 விசுவ ரூப தரிசன யோகம்

பார்த்தா ! என்னைப் பார் இப்பொழுது
வகைவகை யானஎன் வடிவங் களைப்பார்
தெய்வீக உறவின் திறத்தினையும் பார்
பற்பல வண்ணம் பரவுதலைப் பார்
பற்பல உருவப் படங்களையும் பார்!

12.12 Bhakti Yoga

Better is knowledge than practice, better than knowledge is concentration, better than concentration is renunciation of the fruit of all action, from which directly issues peace

"Practice" (abhyasa) is the practice of yoga of meditation and control of psychic processes; "knowledge" (jnana) is intellectual effort; "concentration" (dhyana) is devoted worship. If as a result of all this, there is no renunciation of the fruit of action, "practice" is no "practice", "knowledge " is no "knowledge", and "concentration" is no "concentration" (comment by Gandhi)

12.12 பக்தி யோகம்

பழக்கத்தைக் காட்டிலும் ஞானம் சிறந்தது. ஞானத்தைக் காட்டிலும் தியானம் சிறந்தது. தியானத்தைக் காட்டிலும் செய்கைப் பயன்களைத் துறந்து விடுதல் மேம்பட்டது. அத்துறவைக் காட்டிலும் சாந்தி உயர்ந்தது.

12.12 பக்தி யோகம்

நாடும் பயிற்சியில் ஞானம் சிறந்தது
ஞானத் தைவிடத் தியானம் சிறந்தது
தியானத் தைவிடத் தியாகம் சிறந்தது
தியாகம் தருவது தினமும் சாந்தி

கண்ணதாசன்

13.32 Ksetra-Ksetragna-Vibhaka Yoga

As the all-pervading ether, by reason of its subtlety, is not soiled even so Atman pervading every part of the body is not soiled.

13.32 க்ஷேத்ர- க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

எங்குமிருந்தாலும் ஆகாசம் தன் நுண்மையால் பற்றற்று நிற்பதுபோல், உடம்பில் ஆத்மா எங்கணமிருந்தாலும் பற்றுருவ திலன்

13.32 க்ஷேத்ர- க்ஷேத்ரக்ஞ விபாக யோகம்

ஆகாயம் என்பது என்ன? அது எதிலே ஒட்டிக் கொண்டிருக்கிறது? ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட ஒரு கலவை, அந்த ஆகாயம். அது போலத்தான் ஆத்மாவும். அது எந்தத் தேகத்தில் இருந்தாலும், தேகத்தோடு ஒட்டுவதில்லை.

14.24 Gunatraya-vibhaka Yoga

He who holds pleasure and pain alike, who is sedate, who regards as same earth, stone and gold, who is wise and weighs in equal scale things pleasant and unpleasant, who is even-minded in praise and blame; that man is called gunatita.

14.24 குணத்திரய விபாக யோகம்

துன்பத்தையும் இன்பத்தையும் நிகராகக் கொண்டோன். தன்னிலையில் நிற்போன்; ஓட்டையும் கல்லையும் பொன்னையும் நிகராகக் காண்பான்; இனியவரிடத்தும், இன்னாதாரிடத்தும் சமானமாக நடக்குந் தீரன்; இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் நிகராகக் கணிப்பான்; அவனே குணங்களைக் கடந்தவன்.

14.24 குணத்திரய விபாக யோகம்

எவன் இன்ப துன்பங்களை ஒரே எடைக் கல்லைப் போட்டு நிறுக்கிறானோ, எவன் தன்னைத் தான் உணர்ந்து கொண்டவனோ, எவன் தங்கமும், செங்கல்லும் ஒன்றே என்று சமமாகப் பாவிப்பவனோ, எவன் விருப்புக்கும் வெறுப்புக்கும் ஒரே மதிப்புக் கொடுக்கிறானோ, எவன் திடமான உள்ளம் உடையவனோ, எவன் இகழ்ச்சியையும் புகழ்ச்சியையும் ஒன்றாகக் கண்டவனோ, அவனே சத்வம், ரஜஸ், தமோ என்ற மூன்று குணங்களையும் கடந்தவன்.

15.15 Purusottama Yoga

And I am seated in the hearts of all, from Me proceed memory, knowledge and the dispelling of doubts; it is I who am to be known in all the Vedas, I the author of Vedanta and the knower of the Vedas.

15.15 புருஷோத்தம யோகம்

எல்லாருடைய அகத்திலும் நான் புகுந்திருக்கிறேன். நினைவும், ஞானமும், இவற்றின் நீக்கமும்- என்னிடமிருந்து பிறக்கின்றன. எல்லாத் தேசங்களிலும் அறியப்படும் பொருள் யான்; வேதாந்தத்தை ஆக்கியோன் யான்; வேதமுணர்ந்தோன் யானே.

பாரதி

15.15 புருஷோத்தம யோகம்

உள்ளம் முழுவதிலும் உள்ளவன் நானே. ஞாபக சக்தியும், ஞாபக மறதியும் என்னாலேயே உண்டாகின்றன. அவை இரண்டும் நீங்குவதும் என்னாலே. வேதங்கள் கண்டுகொண்ட வேதப்பொருள் நானே. வேதாந்த இயக்கமும், வேதத்தை அறிந்துகொண்டவனும் நானே!

16.21 Daivasura-Sampad-Vibhaka Yoga

Three-fold is the gate of hell, leading man to perdition- Lust, Wrath and Greed; these three, therefore, should be shunned.

16.21 தெய்வாசுர சம்பத் விபாக யோகம்

ஆத்மா நாசத்துக்கிடமான இம்மூன்று வாயில்களுடையது நரகம்:- (அவையாவன) காமம், சினம், அவா. ஆதலால், இம்மூன்றையும் விடுக.

16.21 தெய்வாசுர சம்பத் விபாக யோகம்

வளரும் நரகத்து வாசல்கள் மூன்று
காமம் குரோதம் லோபங்கள் என்று
ஆத்மரா கத்தை அழிப்பவை அவையே
மூன்றையும் விலக்கு மோட்சமே உனக்கு

17.16 Sraddhatraya-Vibhaka Yoga

Serenity, benignity, silence, self restraint, and purity of the spirit- these constitute austerity of mind.

17.16 சிரத்தாத்ரய விபாக யோகம்

மன அமைதி, மகிழ்ச்சி, மௌனம், தன்னைக் கட்டுதல், எண்ணத் தூய்மை - இவை மனத் தவ மெனப்படும்

17.16 சிரத்தாத்ரய விபாக யோகம்

தெளிந்த உள்ளம், பரம சாதுவாக இருத்தல், மௌனத்தையே தாய்மொழியாகக் கொள்ளுதல், மனத்தைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல், ஆத்மாவைத் தவிர ஒன்றை நினையாதிருத்தல்- இவை மனத்தினால் செய்யப்படும் தவமுறைகளாகும்

18.62/73 Moksha-Sanyasa Yoga

In Him alone seek thy refuge with all thy heart, O Bharata. By His grace shalt thou win to the external haven of supreme peace.

Thanks to Thy grace, O Achuta, my delusion is destroyed , my understanding has returned. I stand secure, my doubts all dispelled; I will do thy bidding.

18.62/73 மோக்ஷ சந்யாச யோகம்

பாரதா, எல்லா வடிவங்களிலும் அவனையே சரணெய்து. அவனருளால் பரம சாந்தியாகிய நித்தியா ஸ்தானத்தை எய்துவாய்.

மயக்கமழிந்தது. நின்னருளாலே, அச்சுதா. நான் நினைவு அடைந்தேன். ஐயம் விலகி நிற்கிறேன். நீ செய்யச் சொல்வது செய்வேன்.

18.62/73 மோக்ஷ சந்யாச யோகம்

பாரத குமரா! பார்த்தா! தனஞ்சயா!
உடலால் மனத்தால் ஒவ்வொரு கணமும்
பகவான் தாள்களைப் பற்றுவா யாகுக
அவனது அருளால் அமைதி கிடைக்கும்
அமர வாசலும் அதனால் திறக்கும்

அச்சுதா! உந்தன் அருள் மொழி கேட்டேன்
அருமை!அற்புதம்!அதிசயம்!அடடா!
நெஞ்சம் நிமிர்ந்தது! நினைவு எழுந்தது!
ஐயம் தெளிந்தது! அச்சம் தவிர்த்தது!
மோகம் அழிந்தது! மூன்றும் தெரிந்தது!
நன்னிலை பெற்றேன்! நன்னிலை பெற்றேன்!

.

கண்ணதாசன்

In a nutshell

1. Good Vs Evil- our daily battle
2. Don't worry about death;
   birth and death repeat
3. Control senses;
   put your organs to useful work
4. Nurture noble thoughts;
   you will attain divinity
5. Want to be wise? Don't be glad when you get pleasant things and don't be sad when you get unpleasant
6. You're your friend; you're your enemy.
   Only you can save your self
7. God will take whatever form you like
8. Your final thoughts at the time of death count; since time of death is uncertain, always think of God
9. God accepts anything offered with devotion
10. Our Atma, our beginning, middle and end, all attributed to God
11. God is infinitely colorful and diverse
12. Renunciation gives peace of mind
13. Atma is like sky; not attached to anything
14. By stability of mind and equanimity, one can rise above the typical qualities - Sattva, Rajas and Tamas
15. God is in the heart of everyone
16. Lust, wrath and greed are gates of hell
17. Austerity of mind comes by serenity, cheerfulness, self restraint and purity of spirit
18. Trust in God and it will be good for you.

கீதாசாரம்

1. மனிதனுக்குத் தீதும் நன்றும் தினசரிப் போராட்டமன்றோ?
2. மரண பயம் வேண்டாம்
   பிறப்பும் இறப்பும் தொடர்கதை தான்
3. புலன்களை அடக்கு
   பொறிகளை பயன்தரப் பழக்கு
4. புனித சிந்தனையால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
5. வேண்டிய பொருள் கிடைக்கும்போது குதித்தலும், கிடைக்காதபோது அழுதலும் இல்லாதவன் ஒரு வகையில் ஞானி
6. தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன்; தன்னைத் தானே காக்கவேண்டும்
7. நீ விரும்பும் உருவத்தில் கடவுள் இருப்பார்
8. மரண காலத்துச் சிந்தனைகள் மறு பிறப்புக்கு முக்கியம். மரண காலம், முன் கூட்டி தெரியாது. எனவே எப்போதும் நல்லதையே நினை. இறைவனையே நினை
9. பக்தியோடு கொடுப்பது எதுவானாலும் கடவுளுக்குச் சம்மதம்
10. உயிர்களின் ஆன்மாவும், தொடக்கம், வளர்ச்சி, முடிவும் ஆண்டவனே
11. நிறம் பல; வகை பல; எதிலும் எல்லை இல்லாதவன் இறைவன்
12. தியாகம் தருவது மனச் சாந்தி
13. ஆகாயம் போன்றது ஆத்மா. எதிலும் ஒட்டாது
14. அசைவறு மதியும், சம நோக்கும் குன்றேறி நிற்கும் குணங்கள்
15. ஒவ்வொரு இதயத்திலும் கடவுள் குடிகொண்டுள்ளார்
16. நரகத்துக்கு மூன்று வாசல்கள்.. அவை- காமம், சினம், பேராசையாகும்.
17. மன அமைதி, மகிழ்ச்சி, மௌனம், தன்னைக் கட்டுதல், எண்ணத் தூய்மை - இவை மனத்தவ மெனப்படும்
18. கடவுள் பக்தி அமர வாசலைத் திறக்கும்.

Appendix: Gita 2.19, 20, 22, 23, 24,27
Sankhya Yoga

"He who thinks this (soul) is the slayer
and he who thinks this is the slain
Do not understand,
It neither slays nor is it slain"

"It is never born and never dies,
nor, once it exists, does it cease to be
Unborn, eternal, abiding and ancient
it is not slain when the body is slain…."

"As a man puts off his worn out clothes
and puts on other new ones
So the embodied [soul] puts off worn out bodies
and goes to others that are new"

"Weapons do not cleave it,
fire does not burn it,
Waters do not wet it
wind does not dry it"

"It can not be cleft or burnt
or wetted or dried
It is everlasting, it dwells in all things,
firm, unmoving, eternal….."

"To be born is certain death
to the dead, birth is certain
It is not right that you should sorrow
for what cannot be avoided"

From A. L. Basham, The Wonder that was India

இணைப்பு : கீதை 2.19, 20, 22, 23, 24,27 சாங்கிய யோகம்

“இவன் (ஆத்மா) கொல்வானென்று நினைப்போனும் கொல்லப்படுவானென்று நினைப்போனும் இருவரும் அறியாதார். இவன் கொல்லுவதுமில்லை, கொலையுண்பதுமில்லை”

"இவன் பிறப்பதுமில்லை; எக்காலத்திலும் இறப்பதுமில்லை. இவன் ஒரு முறையிருந்து பின்னர் இல்லாது போவதுமில்லை. இவன் பிறப்பற்றான்; அனவரதன். இவன் சாசுவதன்; பழையோன்; உடம்பு கொல்லப்படுகையில் இவன் கொல்லப்படான்."

"நைந்த துணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு, மனிதன் புதிய துணிகள் கொள்ளுமாறு போல, ஆத்மா நைந்த உடல்களைக் களைந்து புதியனவற்றை எய்துகிறான்“

"இவனை ஆயதங்கள் வெட்ட மாட்டா; தீ எரிக்காது; நீர் இவனை நனைக்காது, காற்று உலர்த்தாது“

"பிளத்தற் கரியவன்; எரித்தற்கும், நனைத்தற்கும், உலர்த்துதற்கும் அரியவன்; நித்தியன்; எங்கும நிறைந்தவன், உறுதியுடையான், அசையாதான், என்றும் இருப்பான்"

"பிறந்தவன் சாவது உறுதியெனில், செத்தவன் பிறப்பது உறுதியெனில், இந்த விலக்கொணாச் செய்திக்கு நீ அழுங்குதல் தகுதியன்று"

பாரதி

கீதாசாரம்

1. மனிதனுக்குத் தீதும் நன்றும் தினசரிப் போராட்டமன்றோ?
2. மரண பயம் வேண்டாம்
பிறப்பும் இறப்பும் தொடர்கதை தான்
3. புலன்களை அடக்கு
பொறிகளை பயன்தரப் பழக்கு
4. புனித சிந்தனையால் மனிதன் என்பவன் தெய்வமாகலாம்
5. வேண்டிய பொருள் கிடைக்கும்போது குதித்தலும், கிடைக்காதபோது அழுதலும் இல்லாதவன் ஒரு வகையில் ஞானி
6. தனக்குத் தானே நண்பன்; தனக்குத் தானே பகைவன்; தன்னைத் தானே காக்கவேண்டும்
7. நீ விரும்பும் உருவத்தில் கடவுள் இருப்பார்
8. மரண காலத்துச் சிந்தனைகள் மறு பிறப்புக்கு முக்கியம். மரண காலம், முன் கூட்டி தெரியாது. எனவே எப்போதும் நல்லதையே நினை. இறைவனையே நினை
9. பக்தியோடு கொடுப்பது எதுவானாலும் கடவுளுக்குச் சம்மதம்
10. உயிர்களின் ஆன்மாவும், தொடக்கம், வளர்ச்சி, முடிவும் ஆண்டவனே
11. நிறம் பல; வகை பல; எதிலும் எல்லை இல்லாதவன் இறைவன்
12. தியாகம் தருவது மனச் சாந்தி
13. ஆகாயம் போன்றது ஆத்மா. எதிலும் ஒட்டாது
14. அசைவறு மதியும், சம நோக்கும் குன்றேறி நிற்கும் குணங்கள்
15. ஒவ்வொரு இதயத்திலும் கடவுள் குடிகொண்டுள்ளார்
16. நரகத்துக்கு மூன்று வாசல்கள்.. அவை- காமம், சினம், பேராசையாகும்.
17. மன அமைதி, மகிழ்ச்சி, மௌனம், தன்னைக் கட்டுதல், எண்ணத் தூய்மை - இவை மனத்தவ மெனப்படும்
18. கடவுள் பக்தி அமர வாசலைத் திறக்கும்.